செ.வெ.எண் :- 596 நாள் :- 13.10.11

**செய்தி வெளியீடு**

**மாநகராட்சி / நகராட்சி / உள்ளாட்சி தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு 17.10.11 மற்றும் 19.10.11 ஆகிய தினங்களில் தொழில் / வர்த்தக நிறுவனங்கள் மற்றும் கடைகளில் பணிபுரிவோருக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை**

*****

தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சி / நகராட்சி / உள்ளாட்சிகளுக்கு 17.10.11 மற்றும் 19.10.2011 ஆகிய தேதிகளில் தேர்தல் நடைபெறுவதாக தமிழ்நாடு தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

1994ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துகள் சட்டம், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 மற்றும் மாநகராட்சிகள் சட்டம் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட சட்டதிருத்தங்களின்படி அனைத்து தொழில் நிறுவனங்கள் / வர்த்தக மற்றும் கடைகள் நிறுவனங்கள் உள்ளிட்டவற்றில் பணிபுரியும் வாக்களிக்கத் தகுதியான ஒவ்வொருவருக்கும் மாநகராட்சி / நகராட்சி / உள்ளாட்சி தேர்தலில் வாக்களிக்க சம்பளத்துடன் கூடிய ஒரு நாள் விடுமுறை அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்வாறு தேர்தலை முன்னிட்டு விடுமுறை அளிக்கப்படும் நாளுக்குரிய சம்பளம் குறைக்கப்படவோ அல்லது பிடித்தம் செய்யப்படக் கூடாது எனவும் இப்பிரிவுகளில் வகை செய்யப்பட்டுள்ளது.

எனவே ஒட்டு பதிவு நடைபெறும் நாளான்று ஒவ்வொரு தொழிலாளிக்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்க வேண்டும் என்பது வேலையளிப்பவரின் சட்டப்படியான கடமையாகும். தொழிற்சாலைகள், கடைகள், நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், தோட்ட நிறுவனங்கள், பீடித் தொழில் நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்கள் தங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஒட்டு பதிவு நடைபெறும் நாளன்று சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(signature) 13/10/11
**தொழிலாளர் ஆணையருக்காக.**

வெளியீடு :-

இயக்குனர், செய்தி மக்கள் தொடர்புத் துறை.
தலைமைச் செயலகம். சென்னை.